**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.20/2022** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 5** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | ராமசந்திரன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **03.01.2026**

**1, 2 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2021ம் வருடம் நொச்சியம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது பிரியங்கா என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தார். இந்த வழக்கின் எதிரியை கோகுலை தெரியும். கடந்த 20.09.2021ம் தேதி போலிசார் அழைத்ததின் பேரில் நொச்சியம் பிரிவு ரோட்டிற்கு நானும், கிராமநிர்வாகஅலுவலரும் சென்றோம். அங்கு எதிரி கோகுல் தான் தான் பாட்டியை கொன்றதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். KV பள்ளி அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக அவர் சொன்னார். அந்த பள்ளிக்கூடம் அருகில் இருந்த மோட்டார்சைக்கிளை எங்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.சா.ஆ.2, மோட்டார் சைக்கிளை கைப்பற்றிதற்கான மகசர் அ.சா.ஆ.3. கிராம நிர்வாக

அதிகாரியும் கையெழுத்து செய்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் ஓய்வூதியம் பெறுகிறேன். சுமார் 2மணிக்கு மேல் நொச்சியம் பிரிவுரோட்டில் எதிரி ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். நானும், கிராமநிர்வாகஅலுவலரும் பணியில் இருக்கும்போது எங்களுக்கு வருகை பதிவேடு பராமரிப்பது உண்டு. நாங்கள் விடுமுறையில் சென்றால் எங்கள் இடத்தில் வேறொரு நபர் பொறுப்பில் நியமிக்கப்படுவார் என்றால் சரிதான். வட்டாட்சியர் மேற்பார்வையில் அந்த வருகைப்பதிவேடு பராமரிப்பது வழக்கம். நாட்குறிப்பில் எங்கு போவோம், வருவோம் என்ற விவரத்தை பதிவுசெய்வோம். போலிஸ் போனில் தகவல் சொல்லி வரசொன்னார்கள். யார் பேசினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த செல்போன் எண் தெரியாது. சம்பவஇடம் சென்றது குறித்து என்னுடைய நாட்குறிப்பில் எழுதியுள்ளேன். போலிசார் விசாரிக்கும்போது அந்த நாட்குறிப்பை ஒப்படைத்தேன். வட்டாட்சியருக்கு வழக்கு சம்மந்தப்பட்ட விவரத்தை எழுத்து மூலமாக தெரிவித்துள்ளோம். அதன் நகலை போலிசார் விசாரிக்கும்போது கொடுத்தோம். மோட்டார்சைக்கிளின் எண், கலர் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அந்த வண்டி யாருடையது என்று போலிசார் என்னிடம் RC புத்தகத்தை காட்டி விசாரிக்கவில்லை. மதியம் சுமார் 01.30, 01.45 மணி வாக்கில் போலிசார் அழைக்கும்போது நான் அலுவலகத்தில் இருந்தேன். எதிரி வாக்குமூலம் கொடுத்துமுடிக்க சுமார் 2 மணி நேரமானது. வாக்குமூலம் தட்டச்சு செய்து முடித்து கடைசியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான்போகும் போது எல்லாம் ரெடியாக வைத்திருந்தார்கள். நான் கையெழுத்து போட்டேன். நானும், கிராமநிர்வாகஅலுவலரும் கையெழுத்து போட்டுவிட்டு உடனடியாக அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். நான் பலவழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் எழுத்துமூலமாக நாட்குறிப்பில் வழக்கு விவரம் எதுவும் பதிவுசெய்யவில்லை என்றும், அதன் நகலை போலிசார் வசம் கொடுக்கவில்லை என்றும், நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் முதல்விசாரைணையில் சொல்வது போன்று சம்பவஇடம் செல்லவில்லை என்றும், நான் போயிருந்தால் ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால்சரியல்ல. போலிசார் காவல்நிலையத்திற்கு வரவழைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.